தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 மேழம் (30-4-90) ஓர் உருபா (இதழ் எண்: 137)

இந்தியாவில், பார்ப்பனீய, முதலாளியங்களின், இன, அரசியல் தாக்குதல்கள் இருக்கும் வரை இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை உணர்வுகள் வெற்றிபெறா! பிரிவினை உணர்வும் வளர்ந்தே தீரும்!

இந்தியாவைப் பொறுத்த அளவில், வேறு எந்த நாட்டையும் விட, ஆளுகின்ற இனம், ஆளப்படுகின்ற இனங்களை விட மிகக் கொடுமையானதும், சூழ்ச்சி மிக்கதும், மக்கள் மேல் அன்பில்லாததும், மக்களை விலங்குகளுக்கும் கீழான தன்மையில் மதிப்பதும், பிறவியிலேயே வேறுபாடுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் கற்பிப்பதும் ஆன ஓர் இனமாக இருப்பது, இங்குள்ள மக்கள் அனைவருமே என்றென்றைக்கும் கவலைப்படுகின்ற ஒரு செய்தியாக இருக்கிறது.

ஆம்! இங்குதான் ஆரியப் பார்ப்பனர்கள் அரசியலில் ஆளும் இனத்தவராகவும், பொருளியலில் கொழுத்த முதலாளிகளாகவும், குமுகாய அளவில் உயர்ந்த மேலாண்மை (மேலாதிக்கம்) உள்ள இனமாகவும், மத நிலையில் அதிகாரத் தலைமைப் பிரிவாகவும், சாதி நிலையில் தலைமைச் சாதிக் குலமாகவும் தங்களை மேலேற்றி நிறுத்திக் கொண்டு, இந்த நாட்டு மக்களை மிகக் கீழாகப் போட்டு, அவர்களை முன்னேற விடாமல் அழுத்தி மிதித்துக் கொண்டு உள்ளனர். இது வேண்டுமென்றோ, வெறுப்பாலோ, மிகைப் படுத்தியோ சொல்லப் பெறுவதன்று. முழு உண்மையாகக் கூறப்பெறுவது.

ஐரோப்பிய ஆரியர்களாகிய வெள்ளைக்காரர்கள் இந் நாட்டை விட்டு வெளியேறும் பொழுது, ஆசிய ஆரியர்களான இந் நாட்டுப் பார்ப்பனர்கள், அவர்கள் விட்டுச் சென்ற ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றி கொண்டதுடன், அவர்களின் வருகைக்கு முன்பிருந்தே தாங்கள் கைப்பற்றி மேலோங்கியிருந்த இன, மத, குமுகாய, கலை, பண்பாட்டு வல்லாண்மைகளை அழுத்தமாக நிலைப் படுத்திக் கொண்டனர்.

அதன் பின்னர் கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாகப் பார்ப்பன வணிக வல்லதிகார ஆட்சியாக ஒரு காசுமீரப் பார்ப்பன நேரு குடும்ப ஆட்சியாகவே—இந்திய ஆட்சி நடந்து வந்தது. நேரு, இந்திரா, இராசீவ்—என்னும் முப்பார்ப்பனக் கொடுந்தலைமை முழு வல்லாண்மை ஆட்சியில், இந்தியாவில் வேறு எந்தத் தேசிய இனமும் அதிகாரத்திற்கு வரவொட்டாமல் அடக்கி ஒடுக்கப்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப்பொதுச் செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையானவிடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

து.பொ.செ.மடல்: *தேடல் 001/14-4-90*

ஆர்வலர்களே, தமிழின அன்பர்களே!

இப்க்க அறிவிப்புகள் வரும். அவை நம் கழக இயக்கம் செயல்பட ஒழுங்கமையத் தூண்டும் பொருட்டானவை!

துணைப் பொதுச் செயலரென அமர்த்தம் பெற்றதும், என் இயக்கம், சிந்தனை! குறித்து 'வெளிப்படையாக' இருப்பதை விரும்புகிறேன். இதனால் நம் நெருக்கம் உறவு வலிவு பெறும்! என்னையும் சரி செய்தல் முடியும்!!

தமிழரின் பெருமைகளை, உரிமைகளைப் பேசி வருகின்றோம். அவர்களின் ஒற்றுமைகளைக் கோரி வருகின்றோம்,

தமிழகத்திலும், பிற் தேசங்களிலும் நாடுகளிலும் '*தமிழினம்*' முன்னேறச் செய்யத்தக்கவை பற்றியெல்லாம் எண்ணுங்கள்; எழுதுங்கள்; தமிழின உறவை வளர்த்துக் கொள்ள முயலுங்கள்.

இளைய தலைமுறைகளிடம் '*தமிழ்*' தமிழினப் பற்றை உருவாக்கும் படைப்புகளை எழுதித் '***தமிழ்ச்சிட்டை***' உரிமை வானில் பறக்க விடுங்கள்.

அறிவாளிகள் — உரத்த சிந்தனையாளர்கள் '***தென்மொழி***'யை வளப்படுத்துங்கள்; நலப்படுத்துங்கள்.

தமிழின ஒற்றுமைக்கான இயக்க உறவுகளைத் '***தமிழ்நில***'த்தில் ஏற்படுத்துங்கள்.

இதுவும் 'அறிவிப்புகள்' போன்றே. ஆனால் ஒன்று, நம் தமிழின ஆர்வலர் நாடகக் கலைஞர் **அதியமான்** தென்மொழியில் எழுதிவரும் 'நாடக ஆக்கம்' குறித்துக் கருத்தறிவியுங்கள். அவர் 'எழுத்தை' ஆக்கத்தைத் திறனறிந்திட முயலுங்கள்! 'சங்கர் நகர்'—தாழையூற்றுத் தமிழன்பர்கள் இவ் வகையில் முனைவார்களா? அதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்யுங்கள். அண்மையில் உள்ள நாடக ஆர்வலர் பங்கேற்கும்படி செயல்படுங்கள். அதிகத் தொலைவிலிருந்து அறிஞர்களை அழைத்து அதிகஞ் செலவழித்து அல்லல் படாதீர்கள்.

அன்புடன், —***பறம்பை அறிவன்***. பறம்புக்குடி.

து.பொ.செ: அறிவிப்பு: 3

நாள் :14-4-90 (தி.பி.2021, மேழம் 1-காரி)

பறம்புக்குடி.

தமிழின ஆர்வலர்க்கும் அன்பர்க்கும்,

'***உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்***' ஓர் உழைப்பியக்கம். இ'து ஒரு கட்சி அன்று—இதன் வளர்ச்சி என்பது "உயர்ந்த கொள்கைகள்" ஏழையும் புரிந்து போற்றும் வாழ்வியல் முறையாலன்றி வேறு வகையால் அறியத் தக்கது அன்று!

அப்படிப்பட்ட, வாழ்வியல் முறை இனமலர்ச்சியில் மாற்றத்தில் ஏற்படுவதாகும். அதுவரை, தொடர்ந்து பாடுபட்டாலன்றி நாம் பெறப் போகும் நலமொன்றும் இல்லை என்றே கூறிவிடலாம்.

ஆயின், நம் கழகம் என்னதான் செய்யமுடியும், செய்ய வேண்டும் என்பது குறித்துச் சென்ற அறிவிப்புகளில் ஓரளவு கோடிட்டுக் காட்டியுள்ளோம்.

அறிவிப்புகள் உங்களிடையே ஏதேனும் அசைவினை உருவாக்கியிருக்குமாயின் மகிழ்வேன். அந்த அசைவின் அடையாளங்களைக் காணத் துடிக்கின்றேன்.

கருத்தறிவியுங்கள் — திறன் தெளிந்து எழுதுங்கள் — பட்டதைப் பொட்டிலடித்துச் சொல்லுங்கள். அப்போதுதான் இயக்கம் உயிரப்புடன் அமையும்.

தமிழகத்தில் தமிழின முன்னேற்றங் கருதிச் செயல்படுகின்ற அமைப்புகளுடன் நல்லுறவு கொள்வோம். அவை பற்றி நடக்கும் பாதைகள் குறித்து அக்கறை செலுத்தி நல்லாற்றில் போகும் போது தட்டிக் கொடுக்கவும், தவறுதல் கண்டவிடத்துத் தட்டிக்கேட்கவும் வல்லவர்களாக அறிவு நலஞ் சிறந்தவர்களாக நம்மை நாம் ஆளாக்கிக் கொள்ளுதல் வேண்டும். தோழமையுடன்,

பறம்பை அறிவன்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. தமிழினத்தின் நிலைகளையோ சொல்லவே வேண்டுவதில்லை. இந்தியத் தமிழ்நிலத்தில் தமிழர்கள் எத்துணையளவு துன்பமும் துயரமும் பட்டார்களோ, உரிமைகளை இழந்தார்களோ, அதை விட இலங்கைத் தமிழ்நிலத்தில் அங்குள்ள தமிழர்கள் அங்கும் ஆட்சியைக் கைப்பற்றியிருந்த அதே ஆரியப்பார்ப்பனர்களான சிங்கள ஆட்சியினரால் அடக்கி யொடுக்கிக் கொடுமைப்படுத்தப்பட்டுக் குற்றுயிராயும் கொலையுயிராயும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

தமிழீழ விடுதலைக்காக, அங்குள்ள தமிழ் இளைஞர்கள் பல்வேறு குழுவினராகப் பிரிந்திருந்தாலும், கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகக் கருவிப் போர் நடத்திப் போராடி வருவதை உலகமே வியந்து கவனித்துக் கொண்டுள்ளது. அவ்வாறு போராடி வருகின்ற அனைத்துக் குழுக்களிலும், மிகவும் வலுப்பெற்ற குழுவாக, இறுதி வரை தம் ஒரே கொள்கை '*தமிழீழ விடுதலைக் கொள்கையே*' என்னும் இலக்குடன் போராடி, இலங்கையின் வடக்குப் பகுதியிலுள்ள தமிழீழத்தை இன்றைக்கு முழுவதும் தன் கையகப்படுத்தியுள்ள, *பெருமாவீரன் பிரபாகரன்* தலைமையிலுள்ள **விடுதலைப் புலிகள்** குழு இருந்து வருவது, உலகத் தமிழினத்தை மிகவும் மகிழ்ச்சிக்கும் பெருமிதத்திற்கும் உள்ளாக்குகிற ஒரு சிறப்புச் செய்தியாகும்.

தொடக்கத்தில் *பெருமாவீரன் பிரபாகரனை* குருவிக் குஞ்சைப் போல் நசுக்கிக் கசக்கிப் பிழிந்து விடலாம் என இங்குள்ள பார்ப்பனீய அரசு கனவு கண்டது; அதற்காகச் சில சூழ்ச்சிக் கோணங்கள் (வியூகங்கள்) அமைத்து, இங்குள்ள படையைத் தந்திரக் கரவாக அங்கு அனுப்பி, முற்றிலும் தமிழர்களையும் தமிழின வரலாற்று நாயகன் பிரபாகரனையும் அழித்தொழிக்கத் திட்டமிட்டது; ஏறத்தாழ இரண்டாண்டுகளாகியும் இரண்டாயிரங் கோடி உருபா செலவிட்டும், அவ் விமயமலை வீரனை இம்மி அசைக்கவும் முடியாமல், எதிர்த்து நிற்கவும் இயலாமல், தோல்வி வெட்கத்துடன் இந்தியா திரும்பியது. அதற்குள் இராசீவின் கொடுங் கோலாட்சிக் கதையும் முடிந்து போனது. அதுவுமின்றித் தமிழகத்திலும் தி.மு.க. ஆட்சி வந்தது. தில்லியிலும் தேசிய முன்னணி, ஆட்சியைக் கைப் பற்றியது. ஆனாலும், இலங்கையில் பிரபாகரன் வலிமை பெற்றிருப்பது பார்ப்பனர்களுக்குப் பிடிக்கவில்லை.

தமிழகத்திலுள்ள கலைஞராட்சிக்கும், தமிழீழத்தில் வலிமை பெற்றுள்ள விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு படுத்தி அவ்வப் பொழுது எதையேனும் தேசிய முன்னணி அரசுத் தலைமைக்கு எரிச்சல் வரும்படி சொல்லிக் கொண்டு வருகின்றனர். அத்துடன் தமிழகத்திலும் வன்முறை, பிரிவினை

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

து.பொ.செ: மடல். மடல் எண்: 001/14-4-90
நாள்: 14-4-90
தி.பி. 2021: மேழம் 1: காரி.

பெறுநர் :
திருப்பெருந்திரு. மதுரை சிவனியத் திருமடப் பெருங்குரு அவர்கள்
(மதுரை ஆதீனம் குருமகா சன்னிதானம் அவர்கள்,)
தலைமைத் திருப் பணியகம், மதுரை-625001.

அருள் சான்றீர்,

வணக்கம். பாவலரேறு பெருஞ்சித்திரனார் — கழக முதல்வர் — அமர்த்தம் செய்திட யான் துணைப் பொதுச் செயலராகச் செயல்பட்டு வருகின்றேன்.

என் இயக்கம், **உலகத் தமிழினத்தின். முன்னேற்றத்திற்கு** ஆற்றப்போவதொன்றுமில்லை, தங்களைப் போன்ற தமிழ் நெஞ்சத் துணையின்றி!

எனவே, என் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவும் அதற்கான அணைகளை நடைமுறைப்படுத்தவும் செய்வீர்கள் என நம்புகிறேன்.

'தமிழன்' ஏடு 01 திசம்பர் 1989 பார்த்தேன். அதில் தங்கள் 'அருளாணைப்படி' எழுதிய மடல் வெளியாகியிருந்தது. 'உலகத் தமிழர்களின் இன்றைய நிலை மிகவும் கவலைக்குரியதாயுள்ளது' என்ற தங்களின் கருத்தை மீளவும் நினைவு கூரும்படி வேண்டுகிறேன்.

இலங்கையில் 'தமிழர் படுகொலை' கண்டு துடித்த தங்களின் அருள் மனம், செயல் துணிவைப் பறம்புக்குடி மேடையில் — தங்களின் உரையின் போது - கண்டவன் யான்! அத்தகைய தமிழ் நெஞ்சம், நான் சுட்டிக் காட்டும் போது 'குறை' களைய வேண்டும். இல்லையா?

1. தங்கள் மடல் தாள் ஆங்கிலத்தில் உள்ளது. அதனைத் தமிழில் தருக. ஆங்கிலம் வழி உலகத் தொடர்பும் வேண்டில், தமிழின் கீழ் ஆங்கிலம் அமைக!

2. ஆங்கிலத்தில் Sri-La-Sri... கீழேயுள்ள முத்திரையில் 'திருப்பெருந்திரு' இந்த முரண்பாட்டை நீக்குக; ஆங்கிலத்திலும் Thirup perunth 'Thiru' என்றமைத்திடுக!

3. சமற்கிருதம் விலக்கித் தமிழிலேயே எழுதுக. அத்தகைய ஆற்றல் உண்டன்றோ! 'தமிழால் முடியும்' என்பதைத் தமிழர் மதம் தழைக்கப் பாடாற்றும் தாங்களன்றோ நிறுவிக் காட்டவும் வேண்டும்.

4. உலக மன்றில் தமிழ்க் கொடி பறக்க வாழ்த்தருளும் தங்கள்பால் இக் கோரிக்கைகளை வைத்துள்ளேன். ஏற்க! உலகத் தமிழின முன்னேற்றத்திற்கான தங்களின் அறிவுரைகளையும் வாழ்த்துகளையும் எளிய எம் முயற்சிகளுக்கு

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

கலைஞரே தூயதமிழைத் தாழ்த்திப் பேசுவதா?

தமிழகச் சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. **தமிழ்க்குடிமகன்** அவர்களின் மகன் செல்வன் **மெய்ம்மொழி—திருலதா** திருமணம் கடந்த ஏப்பிரல் 4-இல் சென்னையில் தமிழக முதல்வர் **கலைஞர் கருணாநிதி** தலைமையில் நடந்தது.

அதில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திப் பேசிய கலைஞர், திரு. தமிழ்க்குடிமகனுக்கும் தமக்கும் ஏற்பட்ட அரசியல் தொடர்பு பற்றிப் பேசிவிட்டு, அவர் அனுப்பிய திருமண அழைப்பு அச்சிடப் பெற்ற தன்மை குறித்துச் சில செய்திகளைக் கூறுகையில், தெரிந்தோ தெரியாமலோ தூய தமிழைப் பற்றிப் பகடியாகச் சில செய்திகள் கூறியிருக்கிறார்.

திரு. தமிழ்க்குடிமகனைப் பற்றிப் பெருமைப் படுத்திப் பேசிய அவர், அவரை, 'நல்ல தமிழ்ச் சான்றோர்' என்றும் 'இன்றைக்குத் தமிழகச் சட்ட மன்றத்தை அவர் ஒரு தமிழ் அவையாகவே நடத்திக் கொண்டு இருக்கிறார்' என்றும், 'அந்த அளவுக்கு அவர் **தனித்தமிழ்** ஆர்வம் கொண்டு இருக்கிறார்' என்றும் மனமாரப் பாராட்டியுள்ளார். ஆனால், அடுத்த கட்டமாக, 'சில நேரங்களில் **அவரிடம் தனித்தமிழ் ஆர்வம் அளவு கடந்து போய் விடுவதும் உண்டு.** சில சமயங்களில் **கட்டுப்படுத்த** முடியாத அளவுக்கு **வேற்று மொழியும் அவரிடம்** புகுந்து விடுவதும் உண்டு' என்று கூறியுள்ளார். இக் கூற்று திரு. தமிழ்க்குடிமகனைப் பற்றிய இன்றைய மதிப்பீடாக இருக்கலாமோ, என்னவோ? தெரியவில்லை. ஏனெனில் திரு. தமிழ்க்குடிமகன் பேச்சை அண்மையில் பரவலாகக் கேட்கும் வாய்ப்பு நமக்கு ஏற்படவில்லை. நான்கைந்து மாதங்களுக்கு முன்னர் வெங்காளூரில் அவருக்குத் தமிழ்ச் சங்கம் தந்த பாராட்டு விழாவில்தான் நீண்ட காலத்திற்குப் பின்னர் அவர் பேச்சை இறுதியாகக் கேட்க முடிந்தது. அங்கு அவர் தூய தமிழைக் கைநெகிழ்க்காமலேயே பேசினார். ஆனால், அவர் பிற விடங்களில் பேசும் பேச்சுகளைக் கேட்ட அன்பர் பலரும், 'அவர் மேடைகளில் இப்பொழுதெல்லாம் தூய தமிழிலேயே பேசுவது குறைவாகவே உள்ளது' என்றும் 'சில நேரங்களில் கலப்புத் தமிழில் மட்டுமன்றிக் கொச்சைத் தமிழிலும் பேசுகிறார்' என்றும் கூறக் கேட்டு மனம் வருந்தியிருக்கிறோம்.

இந்த நிலையில்தான் அவருடைய மகன் செல்வன் **மெய்ம்மொழி—திருலதா** இவர்களின் திருமண அழைப்பிதழ் நமக்குக் கிடைத்தது. அதைப் பார்த்தவுடன் நாம் பெரிதும் அதிர்ச்சி அடைந்தோம். அதில் மணமகளின் பெயர் **ஸ்ரீலதா** என்றிருப்பதை திரு. தமிழ்க்குடிமகன் **திருலதா** என்று மாற்றியிருக்க வேண்டும் என்று உய்த்துணர்ந்து கொண்டோம். 'ஸ்ரீ' என்னும் வடவெழுத்தைத் 'திரு' என்று மாற்றியவர்கள் **'லதா'** என்னும் வடசொல்லையும் **கொடி** என்று தமிழ்ப்படுத்தித் **திருக்கொடி** அல்லது **எழிற்கொடி** என்று வைத்திருந்தால் இன்னும் கொள்கைப் பிடிப்பாகவும், நன்றாகவும், பிறர்க்கு எடுத்துக் காட்டாகவும் இருந்திருக்குமே" என்று ஏங்கினோம்.

ஆனால், அவ்வழைப்பிதழில் **தமிழ்க்குத்** தந்த- (**தூயதமிழ்க்கு** என்று சிறப்பித்துச் சொல்ல வேண்டுவதில்லை. ஏனெனில் தமிழ் என்றாலே தூய தமிழ்தானே! பால் என்றாலேயே தூய பால்தானே! வேண்டுமானால் தண்ணீர் கலந்த பாலையோ அல்லது எருமைப் பால் கலந்ததையோ 'கலப்புப் பால்' என்று குறிப்பதைப் போல, ஒரே ஒரு சொல்லானாலும் வேற்றுமொழி கலந்ததைக் கலப்புத் தமிழ் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். எனவே, அவ்வழைப்பிதழில் தமிழ்க்குத் தந்த) சிறப்பை விடப் பதவிக்கும், பட்டத்திற்கும் தந்த சிறப்பு அதிகம் என்று தெரிய வந்தபொழுது, திரு. தமிழ்க்குடிமகனின் தூய தமிழ்த் தவிர்ப்பை எண்ணி மிக மிக வருந்தினோம்.

ஏனெனில், பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகனின் (அன்றைய சாத்தையாவின்) திருமணம், நம் தலைமையில்தான் நடந்தது என்பதும், அவர் செல்வனுக்கு **மெய்ம்மொழி** என்று பெயர் வைத்ததும் நாமேதாம் என்பதும், **தென்மொழியில்** ஓராண்டு தமிழ்க்குடிமகன் பணித்தொடர்பு கொண்டிருந்தார் என்பதும் நம்மை அவ்வாறு வருந்தும்படியான ஓர் உரிமை உணர்வை நமக்குத் தந்திருந்தன.

எனவே, அதில் தனித்தமிழுக்கு ஏற்பட்ட நெகிழ்ச்சியைக் கவனிக்க வேண்டுவதாயிற்று. அதில் மாதப் பெயரும் நாள் பெயரும் வடமொழியில் **பங்குனி** என்றும், **புதன்** என்றும், பட்டப் பெயர்கள் ஆங்கில மொழியில் **'டாக்டர்'** என்றும், **எம்.பி.பி.எசு.** என்றும், **எம்.ஏ,எம்.பில்.** என்றும் குறிக்கப் பெற்றிருந்ததைக் கண்டு மிகவும் வருந்தினோம். ஒருவர் சாதியொழிப்புக் கொள்கையை எவ்வாறு மணவுறவின் பொழுதுதான் அழுத்தமாகக் காட்ட முடியுமோ, அவ்வாறே தூய தமிழ்க் கொள்கையையும் திருமண நிகழ்ச்சியின் பொழுதுதான் காட்ட முடியும். நாம் செய்து வைத்த நூற்றுக்கணக்கான தென்மொழி அன்பர்கள், தமிழன்பர்களின் திருமண நிகழ்ச்சிகளும் அக்கொள்கைக்குச் சான்றாக அமைந்திருக்கின்றன. அவ்வாறிருக்கையில், திரு. தமிழ்க்குடிமகனின், தலைமகன் திருமண அழைப்பிதழ் தூய தமிழில் இல்லையே என்றும், அவரின் தூயதமிழ்க் கொள்கை நெகிழ்ச்சி கண்டும் மிகவும் வருந்தினோம்.

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

பறம்பை அறிவன் பக்கம்!

1. களத்தில் கேட்கும் கானங்கள்!

களத்தில் கேட்கும் கானங்களில், விடுதலைப் போராளிகள் மக்கள்பால் கொண்டிருக்கும் நன்றியுணர்ச்சி பொங்கி வழிவதைக் காண முடிகிறது.

எங்கள் உடல்களில் ஓடும் செங்குருதி
உங்கள் சோறல்லவா?
உங்கள் சோறல்லவா?—நாங்கள்
தங்கி இருந்தநாள் சில நாள் என்றாலும்
நினைவு நூறல்லவா?

தமிழகத்தில் புரட்சிக்காரர்களை நம்பித் தாங்கிய வீடுகள் பல. ஆயினும், அவர்கள் இன்னமும் 'தாங்கிய உள்ளங்களை' ஏங்குகின்ற நிலையிலேயே வைத்துள்ளார்.

பஞ்சமர் எழுதிய டேனியலும், அங்குப் புரட்சிப் படைப்பிலக்கியம் படைத்து வந்த பலரும் பாராட்டுகின்ற அவர்களையும் விஞ்சிய உணர்வுகளைக் களப்பாடல்களில் காண முடிகிறது!

2. கலைஞரின் கொள்கை...?

கலைஞரை எதிர்த்துக் கிளர்ச்சி; எந்த மேடையை வி.பி.சிங்கிற்குக் கலைஞர் போட்டுத் தந்தாரோ அந்த மேடையிலேயே வி.பி.சிங்—சனதாதள ஆதரவாளர்கள் கலைஞரை எதிர்ப்பதைப் பார்க்கிறோம்!

கலைஞர் மக்களை மறந்தாரா? மக்கள் கலைஞரை மறந்து வருகின்றனரா?

யார்—யாருக்கு நன்றியாக இருப்பது? மக்களின் மொழியில் பேசி, மக்களைத் திரட்டிப் பதவிக்கு வந்தார் கலைஞர். கலைஞரின் கொள்கை தமிழ் மண்ணைச் சார்ந்து நிற்கிறதா! தேசிய முன்னணி?—என்ன இருந்தாலும் அ'து இந்தியத் தேசிய முன்னணிதானே! தமிழ்த்தேசிய முன்னணி இல்லையே? அதனால்தானோ, இந்த எதிர்ப்பு·? இந்த எதிர்ப்பைக் கண்டும் தமிழ் நாட்டுத் தமிழர் தமிழ்க் கலைஞர் கொள்கைக்கு ஆதரவாக எழாததென்ன?

3. இளம் பருவக் கோளாறு!

இப்படி மனம் ஓடுகிறது!! பாவலரேறு முப்பதாண்டுகளுக்கும் மேலாகத் தமிழின முன்னேற்றம் கருதி எழுதியும் பேசியும் வருகிறார்—இக் கொள்கையைப் பற்றி நடக்கும்'இளம் பருவக் கோளாறு'-களையும்—இயக்க மறுப்பான போக்குகளையும் சந்திக்கிறோமே ஏன்?

வினாவிற்கு விடை தேடுவதும் ஒரு சரியான மக்கள் கருத்துக்கான நடைமுறையை ஏற்பதும் இன்றுள்ள புரட்சியான கடமையாதல் கூடும்!

4. தேசிய ஒருமைப் பாட்டுக் குழு!

பாவலரேறு பார்வைபட்டுச் செழிக்கின்ற என் எழுத்தைத் தொடர்கின்றேன். முடிவுகள் செயலாவதில்லை. என்றாலும் செயலாகும் எண்ணமெல்லாம் ஏற்கனவே எடுத்த முடிவுகளின் விளைவுகளே எனக் கருதித் தொடர்கின்றேன்.

தேசிய ஒருமைப்பாடு அவை 101 உறுப்பினர்களுடன் திருத்தியமைக்கப் பட்டுள்ளதாம். அதில் கலைஞரும் உள்ளார்; என்.டி. இராமராவும் இருக்கிறார். ஏன்? செயலலிதாவும் கூட! அசாம் மகந்தாவுக்கும் இடம் உள்ளது. இராசீவ் இல்லாத ஒருமைப்பாடா? அவரும்தாம்! இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா) அதில் இல்லாவிட்டால் ஏது 'பாரத ஒற்றுமை'!? அதுவும் உள்ளது...மற்றவர்களைப்பற்றிச் சொல்லவே வேண்டாம்!

இவர்கள் கூடிப் பேசலாம். 'கொள்ளைக்'காரர்கள்' கூடினால் எதைப் பேசுவார்கள்? இவர்கள் 'ஒருமைப் பாட்டைத்'தானே உறக்கத்திலும் உளறுவார்கள்!

தேசிய இன உரிமைக்கான போராட்டமும் கோரிக்கைகளும் பெருகி வரும்போது, அவற்றிற்கான ஞாயங்களைப் பார்க்காமல், மக்களை ஒடுக்கியும் ஏமாற்றியும் வரும் தலைமைகளின் உறவு—கூடிப்பேசும் பேச்சு— என்ன மாற்றத்தைத் தந்து விடப் போகிறது?

உத்தரப் பிரதேசமும், மத்தியப் பிரதேசமும் தலைமையில் உட்கார்ந்து கொண்டு ஒற்றுமை, ஒருமைப்பாடு பேசுவது வியப்பாகவே உள்ளது!

ஆயிரம் கோடிகளாக இந்திக்கு அள்ளிக் கொடுத்து, அதன் மூலம் இந்தியத்தின் கீழ் அனைத்துத் தேசிய இனங்களையும் ஒடுக்கும் போக்கைத் தடுக்க வேண்டுமே? இதற்கு இந்த அவை' என்ன பண்ணும்?

'பிரிவினைக்கான காரணம்' இன்னும் உள்ளது என்று கூறும் கலைஞர் போன்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? இவர்களின் 'உண்மை உருவம்' புரியாமல் மக்கள் தடுமாறுகிறார்கள்! அதனை வெளிப்படுத்த இந்த 'ஒருமைப்பாடு அவை' உதவக் கூடும்.

5. காதல் கதை இல்லை!

புதினம், கதை படிப்பதில் இப்போதெல்லாம் 'காதல்' இல்லை. அதற்கென அகவை காரணம் அன்று. என் நேரம் அப்படி. என் மகன் 'சேரன்' ஒரு புதினத்தைக் காட்டி நன்றாகவுள்ளது என்றான். என்னிடம் ஒரு நூலை அவன் கொடுத்து நன்றாகவுள்ளது என்றதும் படிக்க ஒரு தூண்டுதல் ஆனது. ஆல்பெர் காம்யு என்ற பிரெஞ்சுப் புரட்சி எழுத்தாளன் எழுதிய 'அந்நியன்' என்ற அந்தப் புதினம் "பிரெஞ்சிலிருந்து தமிழில் வெ. சிறிராம் உதவி கே. நாராயணன்" என்றிருந்தது.

வாழ்க்கையின் ஒவ்வொரு சொல்லும் பட்டறிவின் பட்டை தீட்டப் பெற்றஒளி கொண்டிருந்தது. எனவே, நிகழ்ச்சிக் கோவைகள் நெஞ்சை வழி நடத்தின. 'கதை' என்று தேடினால், 'மெர்சோ' கூறும் 'குட்டிக்கதை' ஒன்றுதான். மற்றதெல்லாம் கலை வண்ணம். 'அயலான்' ஆகி இற பிற்குப் பிறகும் ஒரு பேரின்ப-அமைதி-எதையும்-எதிர்நோக்காத ஒரு படைப்பை நம் முன் நிறுத்தியுள்ளார் ஆல்பெர் காம்யு,

பற்றற்ற—ஒரு வீர வாழ்வை இந்த 'அயலான்' தருகிறான். ஒரு விடுதலை மனம், சாவும் வாழ்வும் சமம் ஆகிப் போனவன் 'மெர்சோ'! பொதுவுடைமை அறிஞர் சார்த்தர் போன்றவர் பாராட்டிய இந் நூலைத் தமிழில் படித்து மனம் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற கணியன் பூங்குன்றனின் கொள்கையில் சரிந்து சாய்ந்து அமைதி கண்டது.

'பற்றற்றிரு, தாமரைஇலை நீர் போல்' என்ற கோட்பாட்டுக்கு மெர்சோவை ஒப்பிடலாம். ஆனால், அவன் வாழ்க்கையைச் சுவைத்த வகையை நோக்கினால், அதில் பொருள் பொதிந்த ஒட்டுதல் தெரிகிறது. அதில் 'அளவு' மீறிய செயலாக எதனையும் நாம் காண முடியாது. ஆனபோதும், இந்த அயன்மைக் குணம் எத்துணை ஆறுதலாக உள்ளதென்று வியக்கத் தோன்றுகிறது.

ஆல்பர் காம்யூ—ஓர் இனிய புரட்சி மனம் கொண்ட துறவியாகப் படுகிறார்! அவர் கலைஞர் புரட்சியாளர்!

6. தமிழ்த் தேசியத் தன்னுரிமை!

தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாட்டுச் சுவரொட்டி, பறம்பை நகரில்! வண்ண வண்ணத் திரைப்படச் சுவரொட்டிகள்...இதனை அமுக்கி விட்டன. என்றாலும் சேற்றில் செந்தாமரை போல முகம் காட்டி அழைக்கும் உயர்ந்த கைகளோடு சுவரொட்டி!

தமிழ்த் தேசியத் தன்னுரிமைக்கு முன்னுரிமை தரும் தமிழகம் உலகத்திற்கு ஒளிதரும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நமது போர்க்குரல் உலகுக்கொரு புதுமை சேர்க்கும்.

பல கல்வி பயிலும் இளைஞர்கள் குமுகாய உணர்வும்—ஏன் குடும்ப நிலையும் கூட அறியாதவர்களாயும் புரியாதவர்களாயும் உள்ளார்கள். முந்திய தலைமுறை தந்த சிந்தனைகளையும் போராட்டங்களையும் பட்டறிவுகளையும் பொறுமையாகக் கற்றுக் கொள்ளாமல் 'தான்தோன்றி'களாக மாறி வருகிறார்கள். இவர்களை இந்த வகையில் செலுத்தி வரும் அரசியல் சூழ்ச்சிகளை அறிந்து கொள்ளாத வரை குமுகாய விடிவு தள்ளிப் போகவே செய்யும்!

தமிழில் பயில்வோம்; புரியாமல் கல்வியைத் தொடர மாட்டோம். 'தனிப்பாடம்' என்ற பேரில் வகுப்பறையில் தூங்கி வழியும் ஆசிரியர்கள் 'கல்வியைச் சீரழிவு' செய்கின்றார்கள். மாணவர்களோ 'குறுக்குவழி'த் தேர்வுக்கு மட்டுமே முயல்கிறார்கள். இந்த அவலம் ஒழிக்கப்பட்டாதல் வேண்டும்!

7. சாதி ஒழிப்புக்குக் கலப்புத் திருமணங்களே!

சாதி இன்று நாடாளுமன்ற மக்கள் நாயக முறையால் தன்னை வலுப்படுத்திக் கொள்ள முனைகிறது. அதற்குச் 'சாதி'த் தலைமைகளின் தீவிரம் காரணமாகிறது. இதனாலேயே 'சாதி' புதிய உள்ளுடைவுகளுக்கு ஆளாகின்றது. இப்படி உள்ளுடைந்து உரமிழந்து போகும் நிலைமையை எதிர் காலம் துல்லியமாக உணரும்!

பெரும்பான்மையாகவுள்ள சாதி, பிற சாதிகளை ஒடுக்குவதென்பது காலம் காலமாகத் தொடரக் கூடியதுதானா என்பதை வரலாற்றடிப் படையில் ஆராய வேண்டியிருக்கும். இப்போதைய நிலையில் இந்தப் 'பெரும்பான்மை' கொடியேறிக் காட்டுகிறது. இங்கே 'கீழ் சாதி,' 'மேல் சாதி' என்ற நிலைமை ஓரளவு அடிப்பட்டு வருவதைக் காண முடிகிறது. இதனால் ஏற்படும் 'சாதியாளுமை' ஓர் அருவருக்கத் தக்க எல்லையை அடைந்து விட்டதெனலாம்.

இங்கே 'கீழ்ச்சாதி அடிமைக்கு விடுதலை' என்பதை விட அப் பெரும்பான்மைக்கு எதிர் நிற்க முடியாமல் கசங்கும் நிலைமையைப் பார்க்க முடிகிறது. அதனை எழுதும் போது, 'சலுகை'யைச் சாதியின் பேராலும், வேறு எதன் பேராலும் பெற்றாலும் இத்தகைய அவலம்தான் வளரும்!

பாவலரேறு 'குடும்பம் ஒரு சாதியற்ற ஒரு தமிழின—தமிழ்க் குடும்பம்' என உருவாகியிருப்பதை உணர்வோமாயின், நாம் 'தமிழன்' என்றழைத்துக் கொள்வதன் தேவையைக் கட்டாயத்தைப் புரிந்து நடப்போம்! (பாவலரேறு குடும்பத்தில் உள்ள ஆறு பிள்ளைகளில் (நான்கு பெண்கள், இரண்டு ஆண்கள்) நான்கு பெண்களுக்கும் ஓர் ஆணுக்கும் கலப்புத் திருமணங்களே. ஓர் ஆணுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.) O

மனம் திறந்த ஒரு பாராட்டு!

அய்யா அவர்களுக்கு, வணக்கம் **தமிழ்நிலம்** ''இதழ் எண் 135'' படித்தேன், மகிழ்ந்தேன். ''ஆயிரம் அரசியல்காரர்களை உருவாக்கலாம்; ஒரு விடுதலை வீரனை உருவாக்குவது கடினம்'' எனும் வரிகளைப் படித்தேன். தங்களின் படைப்புகளில் இதுவே உயர்ந்த—சிறந்த—ஒப்பற்ற படைப்பாகும். இதற்கு ஈடான எழுத்துகள் எங்கும் இனி பிறக்க முடியாது. சிற்றூர்த் தமிழன்

—**வி. நாகரத்தினம்**, அக்கரைப்பாளையம்.

தமிழ்த் தேசியத் தன்னுறுதி!

(தொடர்: 3)

ஆட்சிக் கலைப்பும், ஆளுநர் பதவியும்:

தேசிய இன மக்கள் தேர்ந்தெடுத்த மாநில ஆட்சியைத் தில்லியில் கொலு வீற்றிருக்கும் புதிய 'சுல்தான்கள்' நினைத்த மாத்திரத்தில் கலைப்பதற்கான அதிகாரத்தை அரசமைப்புச் சட்ட நெறி 356 வழங்குகிறது. கலைப்பதற்கான காரணத்தைக் கூட சொல்லவேண்டியதில்லை.

1976-இலும், 1980-இலும் தமிழக ஆட்சியைத் தில்லி ஆட்சியாளர்கள் கலைத்துத் தமிழர்களுக்கு அல்லறம் (அநீதி) இழைத்தனர்.

அன்று, பிரிட்டிசு வல்லரசிய (ஏகாதிபத்திய) ஆட்சி மாநிலங்களைக் கண்காணிக்க ஆளுநர்களை அமர்த்தியது. 'ஆண்டையர்களின் கண்காணிப்பு' என்ற வகையில் அமைந்த அதே ஆளுநர் பதவி, உரிமை இந்தியாவிலும் நீடிக்கிறது. தன்மதிப்புள்ள எந்தத் தேசிய இனமும் அடிமைத்தனத்தின் அடையாளமாக விளங்கும் ஆளுநர் பதவியைப் பொறுத்துக்கொள்ள முடியாது.

தன்னுறுதி (Self-Determination:)

உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் வரையறையின்படி தமிழர்கள் தனித் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழர்களின் தேசமாக தமிழகம் விளங்குகிறது. தமிழ்நாடு போன்ற பல தேசங்களை இந்தியநாடு கொண்டிருக்கிறது.

பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுறுதி உரிமை, அஃதாவது தன்னுரிமை (Right of Self - Determination with the right to Secceede) ஒரு தேசிய இனத்தின் பிறப்புரிமை. அவ்வுரிமை தமிழ்த் தேசிய இனம் உள்ளிட்ட இந்தியாவின் அனைத்துத் தேசிய இனங்களுக்கும் வேண்டும். தமிழ்த் தேசிய இனத்திற்குத் தன்னுரிமை உடனடியாக வேண்டும். தன்னுறுதியுள்ள தேசங்களின் ஒன்றியமாக இந்திய நாடு விளங்க வேண்டும்.

மறுப்புக்கு மறுப்பு:

மாநிலத் தன்னாட்சி மற்றும் அதிகாரப் பரவல் என்று சொல்லப்படும் கோட்பாடுகள் தன்னுறுதிக்குச் சமமானவை அல்ல. ஒரே தேசிய இனத்தை மட்டும் கொண்ட நாட்டிலோ அல்லது ஒற்றை ஆட்சி நடக்கும் நாட்டிலோ கூட ஆளுமை வசதிக்காக மாநிலத் தன்னாட்சி இருக்கலாம்; அதிகாரப் பரவல் இருக்கலாம். ஒற்றையாட்சி நடைபெறும் இங்கிலாந்தில் ஆளுமை வசதிக்காக அதிகாரப் பரவல் உண்டு.

தேசிய இனத்திற்குரிய தேசத்தை மாநிலம் என்று குறிப்பிடுவதே அதன் உரிமைகளைக் கொச்சைப் படுத்துவதாகும். எனவே, நமது கோரிக்கை மாநிலத் தன்னாட்சியோ (சுயாட்சியோ), அதிகாரப்பரவலோ அல்ல; தன்னுரிமை! தன்னுரிமை!

தமிழ்நாட்டு அரசுக்கு இறையாண்மை (Soveriegnity) வேண்டும். ஒன்றிய அரசுக்கும் இறையாண்மை இருக்கும். சோவியத்து ஒன்றியத்தில் தேசியக் குடியரசுக்கும், ஒன்றியக் குடியரசுக்கும் தனித்தனி இறையாண்மை இருப்பது கவனிக்கத் தக்கது.

இரண்டு வகை இறையாண்மை வழங்கப்பட்டால், தேசிய இனக் குடியரசுக்கும், ஒன்றிய அரசுக்கும் முரண்பாடு ஏற்பட்டால் இந்திய ஒற்றுமை என்னவாகும் என்று சிலர் கேட்கிறார்கள். முழுமையான கூட்டாட்சி அடிப்படையில் இறையாண்மை கொண்ட குடியரசுகளின் ஒன்றியமாக இந்தியா விளங்கும்போது, அப்படி ஒரு முரண்பாடு பொதுவாக வராது. ஒருகால் அப்படி ஒரு முரண்பாடு வந்தால் குடியரசின் இறையாண்மை மீது ஒன்றிய அரசு மேலாளுமை செலுத்த முடியாது. தன்னுரிமை என்பதே அடிப்படையில் தேசிய இனத்தின் இறையாண்மை தானே.

இன்றுள்ள அரசமைப்புச் சட்ட ஏற்பாட்டில் இருப்பதைவிட தன்னுரிமை உள்ள கூட்டாட்சியில் பிளவுக்கான வாய்ப்பு மிகக் குறைவு. ஆயினும், எந்தவகை அரசமைப்புச் சட்டமும் ஒரு சட்டம் என்ற பொருளில் ஒற்றுமையைப் பாதுகாத்து விட முடியாது.

தன்னுரிமைக் கோரிக்கை இந்தியாவைப் பிளவுபடுத்துவதற்கான வல்லாளுமைச் சூழ்ச்சி முயற்சிக்கே பயன்படும் என்ற வழக்கும் (வாதமும்) வைக்கப்படுகிறது.

வல்லரசியத்தின், குறிப்பாக அமெரிக்க வல்லரசியத்தின் நலன் முகாமையாக இந்தியா ஒன்றாக இருப்பதில் இருக்கிறதா அல்லது பிளவுபட்டுப் போவதில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

இந்திய அரசு வல்லரசியச் சுரண்டலுக்கு ஆதரவான அரசே ஆகும். இந்தியப் பெருமுதலாளிகள் வல்லரசியப் பெருள் முலமுதலுடனும் தொழில் நுட்பத்துடனும் மேலும்மேலும் கூட்டுச் சேர்ந்து வருவதே வளரும் போக்காகும். இந்நிலையில், பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட பரந்த இந்தியாவில் நுழைந்து சூறையாடுவதற்குரிய இசைவை ஓரிடத்தில், அஃதாவது தில்லியில் பெற்றால் போதும் என்பதே வல்லரசியத்திற்குக் கூடுதல் வசதியாகும். இன்று, முதலாளிய உலகில்

பொருள் மூலமூதல் நடுவப்படுவதும் ஒருங்கிணைவதும் மேலும் மேலும் அதிகரித்து வருகிறது என்பது முகாமையாகக் கவனிக்க வேண்டிய ஒன்று.

எனவே, தன்னுரிமை என்பது பெரும்பாலும் வல்லரசிய நலனுக்கு எதிராகத்தான் இருக்கிறது. வங்காளதேசம் விடுதலையை அமெரிக்க வல்லரசியம் எதிர்த்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தன்னுடைய சுரண்டல் வசதிக்காக பிரிட்டிசு வல்லரசியம் தனித்தனி நாடுகளைச் சேர்த்து ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கியதையும் மறக்க முடியாது.

வல்லரசிய எதிர்ப்புக் களத்தில் நிற்கும் ஒரு நாட்டைப் பிளவு படுத்துவதில்தான் வல்லரசியத்தின் நலன் இருக்கிறது. அந்தக் களத்தில் இந்திய அரசு முனைப்புக் காட்டவில்லை. இந்தியாவைப் பிளவுபடுத்துவது வல்லரசியத்தின் புறநிலைத் தேவையாக இன்று இல்லை. தன்னுரிமை என்பது பிரிவினையை நோக்கித்தான் இருக்கும் என்பதில்லை. இன்று, இந்தியவைப் பொருத்தவரை தன்னுரிமை என்பது வல்லரசிய நலன்களுக்கு எதிரான முழக்கமாகச் செயல்படமுடியும்; செயல் படுகிறது.

இந்தியாவின் ஏதோ ஒரு பகுதியில் தன்னுரிமைப்போராட்டம் வளர்ந்திருக்கும் போது, அப்போராட்டத் தலைமை முரணற்ற வல்லரசிய எதிர்ப்பு ஆற்றல்களிடம் இல்லாது போனால் அதனுள் வல்லரசியம் ஊடுருவ வாய்ப்பு உண்டு.

இந்திய மக்களின் புதுவாழ்வுக்கு வாசலைத் திறந்து விடுவதாகத் தேசியத் தன்னுரிமை விளங்குகின்ற நிலையில் உண்மையான வல்லரசிய எதிர்ப்பு ஆற்றல்கள் தன்னுரிமை அணிவகுப்பில் முன்னணியில் நிற்பதுதான் வல்லரசிய சூழ்ச்சிகளுக்கு இடந்தராத பாதுகாப்பாக இருக்க முடியும்.

வல்லரசியச் சூழ்ச்சியைக் காட்டித் தன்னுரிமையை எதிர்ப்பது ஆடு வளர்க்க விரும்பாதோர் நரியைக் காரணங் காட்டுவதுபோல் இருக்கிறது.

'பாரததேசிய' வெறிக்குப் பலியாகி விட்டவர்கள் இயல்பான தேசியத் தன்னுரிமையை குறுகிய மாநிலக் (பிராந்திய) கொள்கை என்று சாடுகிறார்கள்.

தன்னுரிமையைக் கோட்பாடு என்ற அளவில் ஆதரிப்பவர்களில் சிலர் நடைமுறையில் என்றைக்குமே தன்னுரிமையை ஆதரிக்காத நிலைப்பாட்டை எடுக்கின்றார்கள். இந்தியாவில் முதலாளியத்தின் கீழ்த் தன்னுரிமையைக் கோரக்கூடாது என்பதும், மக்கள் குடிநாயகத்தில் அது தேவைப் படாது என்பதும் அவர்களது கருத்தாக இருக்கிறது.

தன்னுரிமையைப் புரட்சி ஆற்றல்கள் ஆதரிக்கலாமே தவிர அதற்கு முன்னுரிமை கொடுக்கக் கூடாது; ஏனெனில் அது முகாமையாகத் தேசிய முதலாளிகளின் நலன்களுக்கே பயன்படும் என்ற கருத்தும் முன் வைக்கப்படுகிறது. இந்தக் கருத்தின் அடிப்படை, தன்னுரிமை என்பது தேசிய முதலாளிகளின் முழக்கமே தவிர, பாட்டாளிகளின் முழக்கம் அன்று என்ற கண்ணோட்டத்தில் அடங்கி இருக்கிறது. இந்தியப் பெருமுதலாளிகளுக்கும், பெருமுதலாளியல்லாத தேசிய முதலாளிகளுக்கும் இடையில் எழும் முரண்பாட்டின் விளைவே இந்த முழக்கம்; ஒரு வரம்புக்குள் நின்று கொண்டு இம் முரண்பாட்டைப் பயன்படுத்தும் உத்தியாகப் புரட்சி ஆற்றல்கள் தன்னுரிமையை ஆதரிக்க வேண்டும் என்று வேலி கட்டிக் கொள்கிறது இந்தக் கருத்து.

தேசிய இனச் சிக்கல் முதன்மையான சிக்கலாக நிலவுகின்றபோது தன்னுரிமையைப் பாட்டாளி மக்களும் முன்வைக்கலாம்; தேசிய முதலாளிகளும் முன் வைக்கலாம். புரட்சி ஆற்றல்கள் முன் வைத்தால் தன்னுரிமைப் புரட்சியின் ஒரு கட்டத்தை நிறைவு செய்யும். தேசிய இனச் சிக்கலே முதன்மையான சிக்கலாக அரங்குக்கு வந்துள்ள நிலையில் புரட்சி ஆற்றல்கள் தன்னுரிமைக்கு முன்னுரிமை கொடுக்காவிடில் எவ்வளவோ காலத்திற்குப் புரட்சியைப் பின்னுக்குத் தள்ளுகின்றன என்றே பொருள். பாட்டாளி மக்களும், தேசிய முதலாளிகளும் தன்னுரிமைப் போராட்டத்தில் ஒரே அணி வகுப்பில் நிற்கவேண்டுமென்பதே இன்றைய தேவை.

இந்தியாவில் இன்று, தேசிய இன ஒடுக்குமுறை முதன்மையான முரண்பாட்டின் சிக்கலாக இல்லை என்றும், ஒரு பெருந் தேசிய இனம் பிற தேசிய இனங்களை ஒடுக்குகின்ற முறை இல்லை என்றும் சிலர் வழக்காடுகின்றனர்.

மொழி, மதம் மற்றும் பண்பாடு, கல்வி, செய்தித் தொடர்பு, ஆளுமை (நிர்வாகம்), அறமுறை, தொழில், வேளாண்மை மற்றும் அரசியல் முனைகளில் தேசிய இனங்கள் இந்திய அரசால் ஒடுக்கப்படுகின்றன. இந்த ஒடுக்குமுறை முற்றிலுமாக ஒரு பெருந் தேசிய இன ஒடுக்கு முறை வகையைச் சார்ந்ததன்று. இது கட்டமைப்பு ஒடுக்கு முறை (Structural oppression) வகையைச் சார்ந்தது. அரசமைப்பு என்ற கட்டமைப்பின் மூலம் தேசிய இனங்கள் ஒடுக்கப்படுகின்றன. அரசமைப்பில் தலைமை தாங்கும் பெருமுதலாளிகளும், அதில் உறுப்பாயுள்ள நிலக்கிழார்களும், பெரு முதலாளிகளுடன் சேர்ந்துள்ள பன்னாட்டு முதலாளிகளும் கட்டமைப்பு ஒடுக்கு முறையின் மூலவர்கள்.

தங்களது ஒடுக்குமுறைக்கு ஆதரவாக பெரும் பகுதி மக்களைத் திரட்டிக் கொள்வதற்காக இந்துமதக் கருத்துகளைத் துணை கொள்கிறார்கள். மத அடிப்படையில் ஒன்றாக வைத்திருக்கும் போதே, வர்ண-சாதி அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தி

Scanned with CamScanner

வைத்திருப்பது இந்து மதத்தின் சிறப்புக்கூறாகும். இந்தச் சிறப்புக் கூறைத்தான் இந்திய ஆளும் பிரிவு தன் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்கிறது.

தனிப்பெருந் தொகையினரான இந்தி பேசும் மக்களுக்குப் பெருமிதம் ஊட்டித் தன் பின்னால் அணி திரட்டிக் கொள்வதற்கும்,செயற்கையாக உருவாக்க முனையும்-'பாரத தேசியத்திற்கு'ப் பொதுமொழி ஒன்றினை ஏற்படுத்துவதற்கும் இந்தி-மொழியை ஆளுமை நிலையில் வைக்கிறது இந்திய ஆளும் பிரிவு. இந்தியாவில் எங்குவேண்டுமானாலும் சென்று தொழில் தொடங்க, அங்குள்ள மக்களைச் சூறையாட பெருமுதலாளிகளுக்கு 'பாரத தேசியம்' ஒரு தன் தேசியத்தன்மையைக் கொடுக்கிறது. இந்த பாரத தேசியத்தை உயர்த்திப் பிடிப்பதில் இந்து மதவெறி கொண்ட வகுப்பு வெறியர்கள் முன்னணியில் நிற்கின்றனர்.

உண்மையில், இந்தி பேசும் மக்களும் குமுகப் பொருளியல் துறையில் ஒடுக்கப்படுகின்றனர்.

தேசிய இன ஒடுக்குமுறை முதன்மையான சிக்கலாக இருப்பதால்தான் இந்தியாவில் நடைபெறும் போராட்டங்களில் பெரும்பாலானவை தேசிய இனப் போராட்டங்களாகவே வெடிக்கின்றன. புதிய புதிய வல்லதிகாரச் சட்டங்கள் என்னும் கருவிகளை ஏந்தி இந்திய அரசு கொடுமையாகத் தாக்கும் போராட்டங்கள் பெரும்பாலும் தேசிய இனப் போரட்டங்களாகவே இருக்கின்றன.

அரசியல் பொருளியல், பண்பாட்டுத் துறைகளில் முன்னேறத் துடிக்கும் தேசிய இனமக்களின் முயற்சிக்கு மூக்கணாங்கயிறு போட்டுப் பின்னுக்கு இழுக்கிறது அரசின்கட்டமைப்பு ஒடுக்குமுறை. இந்த கட்டமைப்பு ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்காக நடைபெறும் தேசிய இனத் தன்னுரிமைப் போராட்டத்தோடுதான் குமுக வளர்ச்சியின் அடுத்த படிநிலைக்கான போராட்டம் இணைந்திருக்கிறது. எனவே, இன்று முதன்மையாக முன்னுக்கு வந்துள்ள முரண்பாடு, கட்டமைப்பு ஒடுக்குமுறைக்கும் தேசிய இனத் தன்னுரிமைக்கும் இடையிலுள்ள முரண்பாடே ஆகும்.

இந்த முரண்பாட்டை அனைத்திந்திய அளவில் ஒரே நேரத்தில் தீர்ப்பதற்கு இன்று வாய்ப்பில்லை. ஏனெனில், ஒவ்வொரு தேசிய இனத்தின் புரிதல் மற்றும் முதிர்ச்சி வெவ்வேறு மட்டங்களில் இருக்கின்றன.

துணைக்கண்டமாக விளங்கக் கூடிய இந்தியாவில் உரிமைப் போராட்டக் காலத்தைப் போலவே ஒரே சீரான அனைத்திந்திய அரசியல் எழுச்சி உருவாக இப்போது வாய்ப்பில்லை. இந்நிலையில் தன்னுரிமைக்கான போராட்டம் பகுதி பகுதியாகத்தான் நடைபெறும். தமிழ்த்தேசியத் தன்னுரிமைப் போராட்டம் தமிழகத்தை நடுவமாகக் கொண்டு நடைபெற வேண்டியுள்ளது. O

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில். —(1021)

எனவே, அதன் பொருட்டாகவே அத் திருமண நிகழ்ச்சிக்குக் கூட, சாதிப் பெயர் குறித்த திருமண அழைப்பிதழ் கொண்ட நிகழ்ச்சிகளுக்குச் செல்லாமல் தவிர்ப்பது போல், செல்லாமல் தவிர்க்க வேண்டுவதாயிற்று. அதற்காகவும் மனம் மிகவும் வருத்தமுற்றது. ஏனெனில், பதவி பெற்றவர்களும், அதிகாரம் வாய்த்தவர்களும் தாங்கள் கடைப் பிடித்து வந்த-வரும் கொள்கையைத் தொடர்ந்து கட்டிக் காக்கும் பொழுதுதான் அக் கொள்கையைப் பிறரும் பின்பற்றுதற்குரிய வாய்ப்பு ஏற்படும். அவ் வாய்ப்புகள்பெறுத ஏழையர் ஒருகொள்கையை எந்த அளவு கடைப் பிடித்தாலும் அது வலிவு பெறாது.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (1046)

இவ்வாறான நிலைகளையெல்லாம் எண்ணி வருந்திய நமக்கு,கலைஞர் மெய்ம்மொழி திருமணத்தில் மேற்கண்ட செய்திகளை அவ்வாறே சுட்டிக் காட்டிப் பேசியது வியப்பளித்தது என்றாலும், அவர் அதற்கான விளக்கம் சொன்னது, அந்த வியப்பையே வருத்தமாக மாற்றியது. அவர் பகடியாகத் தமிழ்க்குடிமகன் மட்டுமல்லர், தனித்தமிழ்க் கொள்கையர் அனைவருமே உணரட்டும் என்றே, அவருக்கே உரிய ஒரு கிண்டலான் உணர்வுடன் பின் வருமாறு குத்திக் காட்டிப் பேசியுள்ளார்.

"என்னதான் அவர் (தமிழ்க்குடிமகன்) தனித் தமிழ் ஆர்வம் கொண்டு இருந்தாலும், திருமண அழைப்பிதழில் மணமகன் மெய்ம்மொழி பெயருக்குப் பக்கத்தில் எம்.பில் என்றுதான் அவ-ரால் போட முடிந்தது. அதே போல மணமகள் ஸ்ரீலதா என்ற பெயரை திருலதா என்று மாற்றிப் போட்டிருந்தாலும், மணமகள் பெயருக்குப் பக்கத்தில் எம்.பி.பி.எசு. என்றுதான் போட முடிந்தது."

"ஆகவே சிலவற்றைத் தவிர்க்க முடியாது. 'எதார்த்தமாகக்' அவற்றை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்; 'எதார்த்தத்துக்காகவாவது அவற்றை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அப்படித்தான் ஒருமுறை அவரும் நானும் 'காரில்' சென்று கொண்டிருந்த போது, அவர் சொன்னார், "அண்ணே! வான ஊர்தியை நாம் பிடித்தாக வேண்டுமே' என்று. எங்களுடன் யார் வருகிறார்கள் என்று கேட்டார். 'செக்ரட்டரி' வருகிறார் என்றேன். அதற்கு அவர், 'ஏன் செயலாளர் வரவில்லையா' என்றார்"

"இப்படித்தான் ஒரு முறை அவர் அமெரிக்கா சென்றபோது 'புதுயார்க்' போகிறேன் என்றார். எனக்குப் புரியவில்லை, அது என்ன 'புதுயார்க்' என்று கேட்டேன். பிறகுதான் சொன்னார் 'நியூயார்க்' என்று."

"உடனே நான் அப்படியா, வரும்போது குஞ்சு கோழியையும் பார்த்து விட்டு வாருங்கள்'' என்று சொன்னேன். புரியாமல் விழித்தார். அ'து என்ன குஞ்சு கோழி என்றார். அதுதான் 'சிக்காகோ' நகரம் என்றேன்.''

"இதை எதற்கு நான் குறிப்பிடுகிறேன் என்றால், தனித்தமிழ் ஆர்வம் வளர்ந்திடத்தான் வேண்டும். இருந்தாலும் அதற்கும் ஓர் அளவு வேண்டும்—என்பதற்காகத்தான்.''

—என்பதாகப் பேசியிருக்கிறார், கலைஞர்.

—இப் பேச்சில், திரு. தமிழ்க்குடிமகனையும் அவர் தமிழ்ப் பற்றையும் கலைஞர் பாராட்டிப் பேசினாலும், அவரது தனித்தமிழ்ப் பற்றை, வேறு ஒரு கோணத்தில், அவரின் நடைமுறையையே அளவு கோலாகக் கொண்டு, ஓர் எல்லைக்குட்பட்டு இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டது, தனித்தமிழே தேவையில்லை என்று கூறிக் கொண்டிருக்கும் தமிழ் எதிரிகளுக்கு ஊக்கமாகவும் ஆக்கமாகவும் போய்விடும் என்பதைக் கலைஞர் நினைத்துப்பார்த்திருக்க வேண்டும்.

திரு.தமிழ்க்குடிமகன், எம்.பி.பி.எசு. என்றும் எம்.ஏ.எம்.பில். என்றும், 'டாக்டர்' என்றும், திருலதா என்றும், 'பங்குனி' மாதம் என்றும், 'புதன்' கிழமை என்றும் தம் மகனின் திருமண அழைப்பிதழில், கலப்புத் தமிழில், குறிப்பிட்டது, அவருக்குக் கிடைத்த பதவிநிலையால் ஏற்பட்ட கொள்கை நெகிழ்ச்சியையே காட்டுவதாகுமேயன்றி, தமிழின் இயலாமையைக் காட்டுவதாகாது என்பதைத் தூய தமிழையே தம் வாழ்வியல் நோக்கமாகக் கொண்டிருக்கும் தென்மொழியின் மெய்ம்மைத் தமிழன்பர்களும், மொழிஞாயிறு பாவாணரின் உண்மைப் பற்றாளர்களும் நன்கு அறிவர்.

திரு. தமிழ்க்குடிமகன், எம்.ஏ என்பதற்கு, க.மு. என்றும், பி.எசி. என்பதற்கு அறி.இ. என்றும், 'டாக்டர்' என்பதற்குப் 'பண்டாரகர்' அல்லது 'முனைவர்' என்றும், 'பங்குனி' என்பதற்கு 'மீனம்' என்றும் 'புதன்' என்பதற்கு 'அறிவன்' என்றும் முன்னரெல்லாம் போட்டுக் கொண்டிருந்தவர்தாம்! ஏனோ பதவி வந்த பின்னர் அக் கொள்கைச் செயலைக் 'கைதூவி' விட்டார் என்பது வருந்துதற்குரியதுதான். இனி, அவர் தம் தமிழ்க் கொள்கையில் தாழந்து விட்டார் என்பதற்காகத் தமிழே தாழ்ந்துவிட்டது போலும், அல்லது தமிழ்க்குடிமகன், தாம் கொண்ட தூயதமிழ்க் கொள்கையின் அளவுதான், தூயதமிழை வளர்க்க வேண்டிய கொள்கையின் அளவு என்பதைப் போலும், கலைஞர் அவருடைய மகனின் திருமண அழைப்பையே அளவு கருவியாக வைத்துப் பேசியது, தமிழ்குடிமகனை உயர்த்தியதும் ஆகாது, அல்லது தம் திறமையை வெளிப்படுத்தியதும் ஆகாது. அல்லது தூய தமிழுக்கு அரண் சேர்த்ததும் ஆகாது.

ஒருவர் தமிழை விரும்புவது உண்மையானால் அல்லது அதன்மேல் பற்று வைத்திருப்பது உண்மையானால், அவர் தூய தமிழை விரும்பாமல் இரார். தம்மால் தூய தமிழைக் கையாள முடியவில்லையே என்று அவர் வருந்துவாரே தவிர, அந்த உணர்வைக் கிண்டல் பண்ணியோ, அல்லது கிழிறக்கியோ பேசவோ, எழுதவோ மாட்டார். அவ்வாறு பேசுவது தமிழுக்கு இழுக்கையும் தமிழ்ப் பகைவர்களுக்கு ஊக்கத்தையும் தரும் என்பது அத்தகையவர்களுக்குத் தெரியும். அவ்வாறிருக்க, பின் ஏன் கலைஞர் இவ்வாறு தூயதமிழுக்கு எல்லைகட்டிப் பேசுவதுபோல் 'பகடி' செய்து பேச வேண்டும்?

அதுதான் அவரின் இயலாமையை மறைத்துக் கொள்ள அவர் கையாளும் தந்திர உத்தியாகும். அத்துடன் அத்தகைய தந்திர உத்தி உடையவர்களைத்தாம் அவர் தம்மோடு இணைத்துக் கொள்வார் என்பதையும் வெளிப்படுத்தியதாகும் அவர் பேச்சு!

ஆனால், கலைஞர்க்கு நாம் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். திரு. தமிழ்க்குடிமகனைப் போன்றவர்களை வைத்துத் தமிழை மதிப்பிட்டு விட வேண்டாம் என்பதையும், கொள்கையை முனைமழுக்கும் குறைதமிழ்ப்பற்றை முழுமையான நிறைதமிழ்ப்பற்றுகக் கலைஞர் வரையறுத்து விட வேண்டாம் என்பதையும் அவர் உணர்ந்து பார்த்தல் வேண்டும்!

பதவிகளால் கொள்கை மேன் மேலும் உயர்ந்து போதல் வேண்டுமே யன்றித் தாம் கொண்ட கொள்கை தமக்கு வந்து வாய்க்கும் நிலையற்ற பதவிகளால் தாழ்ந்து விடுதலும் முனைமழுங்குதலும் கூடாது என்பதை திரு. தமிழ்க்குடிமகனுக்கும், அவர் போல் உள்ள பிற தூய தமிழன்பர்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறோம். O

3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வு, அவற்றுக்குக் கலைஞர் ஆதரவு என்றெல்லாம் கூறி, நடுவணரசு உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தூண்டி வருகின்றனர்.

இந்த நிலையில், பார்ப்பனர்களுக்கு நாம் வெளிப் படையாக ஒன்றைச் சொல்லிக் கொள்ளுகிறோம். ***"இந்தியாவில், பார்ப்பனீய, முதலாளியங்களின், இன, அரசியல் தாக்குதல்கள் இருக்கும் வரை இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்னும் போலியுணர்வுகள் வெற்றி பெறப் போவதில்லை. மாறாக அவற்றுக்கு இனி என்றுமே தோல்விதான்! அது மட்டுமன்று, அவ்வினம் அஞ்சிக் கொண்டிருக்கும் பிரிவினை உணர்வும் வளர்ந்தே தீரும்''***—என்பதைப் பார்ப்பனர்கள் ஆழமாகத் தங்கள் உள்ளங்களில் பதித்துக் கொள்வார்களாக.

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி ஊக்கத்தருவீர்கள் என நம்புகின்றேன்.

தங்கள், **பறம்பை அறிவன்**

படி: கழக முதல்வர், சென்னை-5

பறம்பை அறிவன்,
துணைப் பொதுச் செயலர்,
உலகத் தமிழின முன்னேற்றக்கழகம்,
பறம்புக்குடி-623707. 17-4-90.

பெறுநர்:
'ஒளி':-ஓர் உயர் கல்வி இயக்கம்,
தோழர். கோ. கேசவன்,
20, மேல சாராயப் பட்டரைத் தெரு,
உறையூர், திருச்சி-3.

தோழர்க்கு,

வணக்கம். 'ஒளி' பெற்றேன்—உயர் கல்வி இயக்கம் குறித்த அறிக்கை கண்டேன். சாரமான நோக்கம் உலகத் தமிழின முன்னேற்றம் கழகத்திற்கு எதிரானதன்று; உடன்பாடானதே!

அறிவாளிகளை, படிப்பாளிகளை அணி திரட்ட 'ஒளி' உருவாக்கும் உயர் கல்வி இயக்கம் குறித்துப் பெருமிதப்படுகிறேன். இதனை,'மக்கள் கல்வி இயக்கம் வரவேற்றுத் தழுவிக் கொள்ளும் எனவும் நம்புகின்றேன். ஆனபோதும் 'தனி' இயக்கம், ஒரு முரண்பாடாகி வளர்ச்சியைத் தடுக்காது என்றே 'கருதுகின்றேன். அதற்கான நேச உறவை-ஒன்று பட்ட முயற்சிகளைத் தொடர்வதும் வேண்டும்'.

'உயர் கல்வி இயக்கம்' கல்வித் திட்டத்தின் குளறுபடிகளையும், மக்களுக்கெதிரான அதன் தன்மைகளையும், அம்பலப்படுத்தும் என்பதாலும்,

"ஆதிக்க சக்திகளாக நின்று இன்றைய'சமூக அமைப்பை"க் கட்டிக் காக்கத் திட்டமிடும் மேனிலைச் சூழ்ச்சிகளை முறியடிக்க இந்த இயக்கம் தேவை என்பதாலும்,

கல்வியை வணிகச் சரக்காக்கி அதனை எளியவர்க்கு 'எட்டாக்கனி'யாக்கி விட்ட பல்வேறு படிப்புத் துறைகளையும் பற்றித் திட்டவட்டமான அம்பலப்படுத்துதல் மூலம், மக்களிடையே விழிப்பூட்ட இந்த 'ஒளி' உதவும் என்பதாலும்,

அனைத்துக்கும் மேலாகத் தமிழகத்தில் தமிழ் வழிக் கல்விக்காக-தாய்மொழிக் கல்விக்காக இந்த இயக்கம் நிற்கும் என்பதாலும் வாழ்த்தி வரவேற்கின்றேன்.

தமிழகம் ஊன்று நிலமாக, உலகம் தழுவிய கண்ணோட்டத்துடன் இந்த இயக்கம் செயல்படட்டும்.

இந்திய தேசியம் போன்ற மாயைத் திரைகளைப் பொசுக்கிடட்டும் என்றாலும், உலகம் தழுவி நிற்கின்ற பரந்த பார்வை, காலடியைச் சுற்றிக் கிடக்கின்ற சிக்கல்களைக் கண்டுகொள்ளாமல் போய்விடும் அச்சம்—ஏதம் பற்றிய எச்சரிக்கை வேண்டுகிறேன்—இந்த 'விபத்து' நம் வரலாற்றில் பல தேசங்களையும் சிக்கல்களையும் அதிகமாக்கியுள்ளது. இல்லையா? உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் இசைந்த பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்பதில் தங்கள் 'ஒளி'யை ஏந்தி மகிழும்...இருளைக் கடிவதில் உறுதி காட்டும் என நம்புவோம்!

தமிழினம் முன்னேற முள் முனையளவு உதவும் என்றாலும் இயக்கத்தை உவந்து ஏற்போம். நன்றி.

வாழ்த்துகளுடன், **பறம்பை அறிவன்**

படிகள்' 1.பாவலரேறு, பெருஞ்சித்திரனார் — கழக முதல்வர், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், சென்னை-5.
2.ம.க.இ. (திண்டிவனம்) தலைமையகம்.

து.பொ.செ.மடல். நாள்: 17-4-1990.
பெறல்: பறம்புக்குடி.

மாண்புமிகு. முதல்வர் கலைஞர் அவர்கள்,
தமிழக அரசு, கோட்டை, சென்னை-9.

கலைஞர் அவர்களுக்கு,

கை கூப்பு. தங்களின் தமிழ், தமிழினப் பற்றை வாழ்த்துகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் தனித்தமிழ்—தூய தமிழ் மீது கொண்டிருந்த அளப்பரிய காதலை அறிவீர்கள். அத்தகைய இயலறிவைப் பெறுவதில் பேரார்வம் கொண்டிருந்த அண்ணாவின் பாதையைப் பின்பற்றுகிறார் கலைஞர் என்பதைத் தொண்டர்கள் ஐயமற நம்புகிறார்கள்.

ஆயின், தமிழக சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு. மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இல்லத் திருமண விழாவில் 'தமிழ்' பற்றிய தங்கள் பேச்சு, எதிரிகளுக்கு 'அவலாக'ப் போய்விட்டது. வெறும் வாயை மெல்லும் 'அந்தக் கும்பல்' இந்த 'அவலால்' பெரிதும் ஆட்டம் போட்டு விட்டதாகவே கருதுகின்றேன்.

ஆனபோதும், பாவலரேறு. பெருஞ்சித்திரனார்க்குப் புரட்சிப் பாவலர் கனக சுப்புரத்தினம் நூற்றாண்டு விழாவுக்கான உயர் நிலைக் குழுவில் இடமளித்ததன் மூலம், தூய தமிழ் நெறிக்கும்—பாவாணர், புரட்சிப் பாவலர் கண்ட தமிழகத்திற்கும் பெருமை சேர்த்த பெருமகர் (பிரமுகர்) ஆகிவிட்டீர்கள். அந்த எதிரிகளின் 'வாய் அடைபட' இந்தப் பெருங்குணச் செயல் நன்கு உதவியுள்ளதென்றால் மிகையன்று.

'தமிழ்ச் சாதி' நான் எனத் துணிந்து நின்று, தமிழின முயற்சிக்குப் பாடுபடும் கலைஞர்க்கு **உலகத் தமிழின முன்னேற்றக் கழகச்** சார்பில் பாராட்டுதலையும் நன்றியையும் உரிதாக்குகின்றேன்.

பறம்பை அறிவன்

படிகள்: 1.**பாவலரேறு பெருஞ்சித்திரனார்,** உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தலைமையகம். சென்னை-5.
2.ஆசிரியர், 'முரசொலி' நாளிதழ், சென்னை.

இளைஞர் படை எழுந்திட்டால்!

பாவலர் சின்னப்பனார்.

எந்தமிழ் இளைஞர் ஆர்ப்பரித்
திங்கே எழுந்திட்டால்
வந்த வடவர் வால்நீண்
டிடுமா? வல்லாட்சி
செந்தமிழ் நாட்டை விட்டோ
டாதா? பார்ப்பனர்கள்
முந்தி விரைந்தே மூட்டை
கட்டி ஏகாரோ?

கொந்தளித் திங்கே நந்தமிழ்
இளைஞர் எழுந்திட்டால்
அந்தத் தில்லியர் செருக்கோ
டாணவம் திமிரெல்லாம்
வெந்தே சாம்பல் ஆகிக்
காற்றில் பறக்காதோ?
இந்திப் பரத்தையின் எண்ணம்
மண்ணாய்ப் போகாதோ?

எரியும் நெருப்பாய் இளைஞர்
படையிங் கெழுந்திட்டால்
கரியாய்ப் புகையாய்ப் போகா
தோயிவ் வடவாட்சி?
பெரிய நலமாம் பிறவி
நலமாம் என்கின்ற
உரிமை என்னும் ஆட்சி
நலந்தான் ஓங்காதோ?

அடல்தமிழ் இளைஞர் உணர்ச்சி
மிகுந்தே எழுந்திட்டால்
வடவர் கையுள நமையா
ளுரிமை அதிகாரம்
உடனே நம்மினக் கையில்
வந்தே வீழாதோ?
கடல்சூழ் உலகில் நமக்கென
ஓரர சமையாதோ?

சரிநகர் வோடு பொதுமை
உணர்வை நிலைநாட்டும்
பிரிவினை யாலே தனித்தன்
ளுட்சி பெற்றேதான்
அரியணை ஏறிப் பைந்தமிழ்
அன்னை அரசோச்சும்
பெருமித நிலைதான் உடனே
இங்கு பிறவாதோ?

கொதித்தே சீற்றம் கொண்டே
இளைஞர் எழுந்திட்டால்
எதிர்த்தே வெல்வோர் யாரே?
இந்த உலகினிலே
மதியா தவரும் மதித்தே
நம்மைப் போற்றாரோ?
பதிகம் பாடி வருகெனப்
புகழ்ந்தே ஏற்றாரோ?

அப்பாத்துரையார் குடும்பத்திற்கு...

மறைந்த திராவிடவியல் வரலாற்றுப் பேரறிஞரும், பன்மொழிப் புலவரும் ஆகிய **கா. அப்பாத்துரை** அவர்களின் குடும்ப நலக் **கொடை வேண்டுகோள் தென்மொழி** சுவடி 25 ஓலை 5-இலும், தமிழ்நிலம் 134-இலும் வெளிவந்துள்ளதற் கேற்ப, அன்பர்களும் அருளாளர்களும் அவர் குடும்பத்திற்கு நன் கொடைகளை வாரி வழங்கி வருகின்றனர். நீங்களும் அவ் வருட் கொடை அருளாளர் வரிசையில் இடம் பெற வேண்டாமா? அவ்வாறாயின் நீங்கள் இன்றே இன்னே நம் பன்மொழிப் புலவர் **அப்பாத்துரையாரின்** துணைவியாருக்குக் கீழ உள்ள முகவரிக்கு உங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பிவிட்டுத் **தென்மொழி**க்கும் ஓர் அஞ்சலட்டையில் செய்தியை தெரிவியுங்கள். தொகை விடுக்கவேண்டிய முகவரி:

திருவாட்டி **அலர்மேலு அப்பாத்துரை**
10, அப்பாத்துரையார் தெரு, சென்னை-18.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 54

அறமன்றம், ஆட்சித்துறை, காவல்துறை, மூன்றும் அதனதன் வழியில் இயங்கும் போதுதான், குடியரசு அமைப்பு சரிவர இயங்க முடியும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 137.

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர் :

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS(C)657